**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : சகாபுதின்** | **Father/Husband's Name: ஷாகுல் ஹமீது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது புது ஆயக்குடியில் குடியிருந்து, கறிகடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.09.2017 ம் தேதி எனக்கு தெரிந்தவரின் Shift car TN 57 AH 7402 G– Gray colour என்ற வாகனத்தை விற்பதற்காக என்னிடம் கொடுத்தார். அதை நான் ஏர்வாடி அப்பாஸ் என்பவரிடம் கடந்த 10.02.2017 அன்று வண்டியை விற்று கொடுப்பதற்காக அவரிடம் மேற்படி நான்கு சக்கர வாகனத்தின் அசல் RC Book மற்றும் வண்டியின் பெயர் மாற்றம் செய்வதற்கான ஆவணங்களை மேற்படி அப்பாஸ் என்பவரிடம் கொடுத்தேன். நான் ஆஜர் எதிரியிடம் மேற்படி வாகனத்தை விற்பதற்காக 410000 க்கு விலை பேசி முன் பணமாக 140000 பெற்றுக்கொண்டு அவரிடம் அசல் ஆவணங்களை ஒப்படைத்தேன். பின்னர் ஆஜர் எதிரியை நேரிலும், போனிலும் தொடர்பு கொள்ள முடியாததால் அவரை தேடி வந்தேன். பின்னர் நான் அவரது உறவினர்களிடம் விசாரித்ததில் ஆஜர் எதிரி கோயம்புத்தூர் சிறையில் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். பின்னர் ஆஜர் எதிரி ஜாமினில் வந்துள்ளார் என்ற விபரம் தெரிந்து நான் அவரை தொடர்பு கொண்டு மேற்படி 07.09.2017 அன்று பழனி – திண்டுக்கல் ரோடு ஸ்டேட் பேங்க் கிளை அருகே கிழபுறம் நான் வங்கி வேலையாக வந்திருந்த போது அவரை பார்த்து மேற்படி வாகனத்தின் அசல்**

**ஆவணங்களை ஒப்படைக்க அவரிடம் கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி மேற்படி நான்கு சக்கரவாகனத்தின் RC Book என்னுடைய அம்மா பெயரில் மாற்றிவிட்டதாக ஆஜர் எதிரி என்னிடம் தெரிவித்தார். பின்னர் நான் என்னிடம் விற்க சொல்லி கொடுத்த வாகனத்தின் உரிமையாளரிடம் என்ன சொல்வது என்று கேட்டதற்கு அதற்கு ஆஜர் எதிரி அப்படியெல்லாம் அசல் ஆவணங்களை திருப்பி தரமுடியாது டா தாயோழி , நான் குண்டாசை உடைச்சவன்டா உன்னால் ஒன்னும் பண்ணமுடியாது அப்படியென்று சொல்லிக்கொண்டே ஆஜர் எதிரி என்னை இடது புற முகத்திலும், நெஞ்சு, மார்பிலும் என்னை கையால் தாக்கினார். என்னை பற்றி உறவினர்களிடம் அதிகமாக விசாரித்து அடிக்கடி என்னுடைய செல்போனிற்கு அழைத்து தொந்தரவு செய்துள்ளீர்கள் மேற்கொண்டு இது மாதிரி விசாரித்து கொண்டிருந்தீர்கள் என்றால் உன்னால் இருக்க முடியாது என கொலை மிரட்டல் விடுத்தார். ஆஜர் எதிரி தாக்கியதில் எனக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. அருகில் இருந்தவர்கள் என்னை விலக்கிவிட்டார்கள். பின்னர் நான் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு சுலைமான் , மன்சூர் , அபுபக்கர் சித்திக் ஆகியோர் என்னை அழைத்து சென்றார்கள். எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டதால் சிகிச்சைக்கு பின்னர் அன்றே வீடு திரும்பினேன். பின்னர் ஏற்கனவே ஆஜர் எதிரிக்கு பல வழக்குகள் உள்ளதால் உயிர் பயத்தால் நான் புகார் கொடுக்காமல் அன்றைக்கு வீடு சென்றுவிட்டேன். பின்னர் மறு நாள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் நான் பழனி நகர் காவல் நிலையம் சென்று ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. இல்லை**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.09.23 11:04:31 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பாபு சுல்தான்** | **Father/Husband's Name: அமிர் ராவுத்தர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது புது ஆயக்குடியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 07.09.2017 ம் தேதியன்று சுமார் காலை 10–11 மணியளவில் நான் எனது சொந்த வேலையாக ஸ்டேட் பேங்க் சென்றிருந்த போது ஸ்டேட் பேங்க் அருகே ஆஜர் எதிரியும் அ.சா.1 ம் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். மேற்படி இருவரும் சத்தம் போட்டு கொண்டிருந்ததால் நான் எனது அக்கா மகன் சகாபுதின் என்பவரை சண்டையிட்ட இடத்திலிருந்து விலக்கி நான் அழைத்து வந்தேன். மேற்படி இருவரும் காரை பற்றி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தனர். மேற்படி இருவரும் வேறு என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 07.09.2017 ஆம் தேதி 11 மணியளவில் ஸ்டேட் பேங்கிற்கு சென்றிருந்தேனா என்றால் நான் ATM ல் பணம் எடுப்பதற்காக சென்றிருந்தேன். பின்னர் சகாபுதின், ஆஜர் எதிரிக்கு 410000 க்கு shift car TN 57 AH 7402 என்ற நான்கு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரிக்கு விலைபேசி அதில் ஆஜர் எதிரி 140000

முன்பணமாக கொடுத்திருந்தார் என்றால் சரிதான். கடந்த 10.02.2017 ம் தேதியில் பழனி ஸ்டேட் பேங்க் முன்பாக காரின் அசல் ஆவணங்களை ஆஜர் எதிரி வாங்கி கொண்டு போனாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆஜர் எதிரி காரின் அசல் ஆவணங்களை அவரது தாயார் பெயருக்கு மாற்றியுள்ளது சம்பந்தமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தார் என்றால் அவரது தாயார் பெயருக்கு மாற்றியது எனக்கு தெரியாது. கார் சம்பந்தமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். அசிங்கமாக கெட்ட வார்த்தையில் ஆஜர் எதிரி பேசிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஆஜர் எதிரி கொலை மிரட்டல் விடுத்தாரா என்றால் சத்தமாக இருந்தது கொலைமிரட்டல் விடுத்தது பற்றி எனக்கு தெரியாது. நானும், மன்சூர் உசேன் என்பவரும் அ.சா.1 ஐ சண்டையிலிருந்து விலக்கி கூட்டி வந்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தாக்கியதில் அ.சா.1 க்கு இடது கண்ணத்தில் மற்றும் மார்பு, முதுகு போன்ற பகுதிகளில் ஓங்கி குத்தி ஊமைக்காயத்தை ஏற்படுத்தி வலியை உண்டாக்கினார் என்றால் அடித்துக்கொண்டிருந்த சத்தம் மட்டும் தான் கேட்டது. நான் அதை நேரில் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. இல்லை

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.09.23 11:04:40 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : மன்சூர் உசேன்** | **Father/Husband's Name: அமிர் அம்சா** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**முதல் விசாரணை**

**1. நான் தற்போது புது ஆயக்குடியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 07.09.2017 அன்று காலை 11 – 12 மணியளவில் டிராவல்ஸ் பங்களா அருகே ஸ்டேட் பேங்க் பழனி – திண்டுக்கல் சாலையில் அ.சா.1 ம், ஆஜர் எதிரியும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 shift car gray colour என்ற நான்கு சக்கர வாகனத்தை ஆஜர் எதிரியிடம் விற்பதற்காக 410000 க்கு ஆஜர் எதிரிக்கு விலை பேசி இருந்தார்கள். அதில் முன்பணமாக ஆஜர் எதிரி 140000 ஐ அ.சா.1 க்கு வழங்கிவிட்டார். வண்டியின் அசல் ஆவணங்களை ஏற்கனவே 2–3 மாதங்களுக்கு முன்பு மேற்படி அட்வான்ஸ் தொகை பெற்ற போதே அ.சா. 1 ஆஜர் எதிரியிடம் கொடுத்து விட்டார். ஆனால் மேற்படி நான்கு சக்கர வாகனத்தை அ.சா.1 வைத்திருந்தார். மேற்படி ஆஜர் எதிரி முழு தொகையை அ.சா.1 க்கு வழங்காமல் நான்கு சக்கர வாகனத்தின் அசல் ஆவணங்களை ஆஜர் எதிரி தன்னுடைய பெயரிலேயே மாற்றி கொண்டார். அ.சா.1 ஸ்டேட் பேங்க் ATM அருகே நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அங்கு வந்திருந்தார். அப்போது அ.சா.1 இத்தனை நாள் எங்கடா போன வண்டியும் வாங்காமல் மீதி பணத்தையும் கொடுக்காமல் எங்கே போனாய் என கேட்டார். அப்போது ஆஜர் எதிரி நான் கோயம்புத்தூரில் வேறொரு வழக்கில் சிறையில் இருந்தேன் என சொன்னார். மேலும் ஆஜர் எதிரி நான்கு சக்கர வாகனத்தின் உரிமையாளர் பெயரை நான் மாற்றி கொண்டதாகவும் ஆஜர் எதிரி**

அ.சா.1 இடம் சொல்லிகொண்டிருந்தார்.அதற்கு அ.சா.1 ஏன்டா இப்படி ஏமாற்று வேலை செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டார் அதற்கு ஆஜர் எதிரி நான் யாருன்னு தெரியுமா என்று சொல்லி தாயோழி, கொம்மா, கோத்தா என்று சொல்லி அ.சா.1 ஐ திட்டினார். பின்னர் ஆஜர் எதிரி அ.சா.1 ஐ முகத்தில் ஓங்கி ஓங்கி குத்தி கொண்டிருந்தார். பின்னர் நான் அவர்கள் இருவரையும் விலக்கிவிட்டேன். அதில் அ.சா.1க்கு இடது கண்ணத்தில் ரத்தகட்டு ஏற்பட்டிருந்தது மற்றும் காது அருகே லேசான ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சுலைமான் மற்றும் அபுபக்கர் சித்திக் ஆகியோர்கள் அ.சா.1 ஐ தனியார் மருத்துவமனையான சங்கர் ராம் கிளினிக்கிற்கு அழைத்து சென்றோம். பின்னர் மறு நாள் என்னை போலிசார் விசாரித்தார்கள் நான் முந்தைய நாள் நடந்த சம்பவத்தை பற்றி கூறினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2. இல்லை

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.09.23 11:04:48 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : சுலைமான்** | **Father/Husband's Name: பாரூக் (எ) அப்துல் பாரூக்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது புது ஆயக்குடியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 2017ம் வருடம் தேதி , மாதம் ஞாபகமில்லை காலை 10.30 – 11 மணியளவில் ஸ்டேட் பேங்க் அருகே எனது இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது கூட்டமாக இருந்தது நான் இரு சக்கர வாகனத்தில் இருந்து இறங்கி சென்று பார்த்த போது எனது ஊர்க்காரரான சகாபுதின் என்பவரை ஆஜர் எதிரி தான் தாக்கி கொண்டிருந்தார். அதை நான் நேரில் பார்த்தேன். பின்னர் இருவரையும் சமாதானம் செய்து அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தி விட்டு அங்கிருந்து சென்றுவிட்டேன். அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே வரவு செலவு பிரச்சனை இருந்ததாக கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. இல்லை**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.09.23 11:05:01 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.5**

| | |
|---|---|
| **Name : சுலைமான்** | **Father/Husband's Name: ஷாகுல் ஹமிது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது புது ஆயக்குடியில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது தம்பி ஆவார். கடந்த 07.09.2017 ம் தேதி காலை 10.45 – 11 மணியளவில் திண்டுக்கல் – பழனி சாலையில் ஸ்டேட் பேங்க் அருகே அ.சா.1 எனது தம்பி ஆஜர் எதிரியிடம் Shift desire gray colour car ஐ 410000 க்கு விலைபேசி 140000 ஆஜர் எதிரி முன்பணமாக காரை வாங்கி கொள்வதற்காக கொடுத்திருந்தார். எப்போது பணம் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்திற்கு முன்னால் 10 ஆம் தேதி கொடுத்திருந்தார் மாதம் எனக்கு ஞாபகமில்லை. சம்பவத்தன்று எனது தம்பி அ.சா.1 ஆஜர் எதிரியிடம் கார் வாங்கி கொள்வதற்கான மீதிபணத்தை கேட்டிருந்த போது ஆஜர் எதிரி கொஞ்சம் சண்டை வருவது போல் பேசிக்கொண்டிருந்தார் அப்போது ஆஜர் எதிரி உன்னிடம் பணத்தை கொடுக்க முடியாது வாகனத்தின் பெயரை நான் மாற்றிகொண்டேன் உன்னால் முடிந்ததை பார்த்துக்கோ என்று அ.சா.1 ன் தாய் தகப்பனாரை கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார். மேற்படி நான்கு சக்கர வாகனமானது அ.சா.1 இடம் தான் இருக்கிறது. அ.சா.1 வாகனத்தின் RC book ஐ பெற்றுக்கொண்டு ஏன் இப்படி சண்டையிடுகிறாய் என கேட்டதற்கு அ.சா.1 ஐ ஆஜர் எதிரி அவரது முகத்தில் வலது கண்ணத்திலும், காதிலும் மாறி மாறி கையால் தாக்கினார். அப்போது பாபு சுல்தான், அபுபக்கர் மற்றும் எங்களுக்கு தெரிந்தவர்கள் அந்த வழியாக வந்தார்கள். அப்போது

ஆஜர் எதிரி அ.சா.1 ஐ பார்த்து நான் குண்டாசை உடைத்தவன் உன்னால் ஒன்னும் பண்ண முடியாது. நான் கோர்ட் கேசை பார்த்தவன் எங்கவேனாலும் போய் என்னவேனாலும் பண்ணிக்கோ என மிரட்டினார். பின்னர் அவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். பின்னர் இது சம்பந்தமாக பேசிக்கொள்ளலாம் என்று நாங்கள் அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நானும், மற்றவர்களும் ஆயக்குடிக்கு சென்றுவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. இல்லை

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.09.23 11:05:08 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 312 of 2018**

**Deposition of Witness P. W.6**

| | |
|---|---|
| **Name : அபுபக்கர் சித்திக்** | **Father/Husband's Name: முகமது இஸ்மாயில்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 23.09.2024**
**Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி மதினா நகரில் குடியிருந்து, பூ வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 4–5 வருடங்களுக்கு முன்பு மதியம் போல் ஸ்டேட் பேங்க் அருகே உள்ள சந்தில் நாங்கள் வேலை பார்த்து விட்டு வெளியே டீ சாப்பிட ஸ்டேட் பேங்க் அருகே நானும், அபு தாகிர் என்பவரும் வந்த போது போலிசார் ஸ்டேட் பேங்க் அருகே சண்டை நடந்தது சம்பந்தமாக சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.09.23 11:05:15 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி**